

தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஷிப் கான் ஏற்பாட்டில் மாவட்டதுணை அமைப்பாளர்கள் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம் பி தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் போடி தொகுதி கழக வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் பெரியகுளம் தொகுதி வேட்பாளர் சக்திவேல் பெரியகுளம் சரவணக்குமார் எம் எல் ஏ . முன்னாள் எம்பி ரவீந்திரநாத் . போடிதொகுதி பார்வையாளர் முன்னாள் மேயர் குழந்தைவேலு பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் எம்எல்ஏமுத்துராமலிங்கம் .மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் மாநில நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை தொகுதிக்குட்பட்ட வில்லிபத்திரி, சூலக்கரை, சின்னவள்ளிகுளம், பெரியவள்ளிகுளம், மாத்தநாயக்கன்பட்டி, குல்லூர் சந்தை, 116 காலனி, பாலவநத்தம் உள்ளிட்ட பகுதிகளில் திமுக வேட்பாளர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் மக்களை நேரில் சந்தித்து வாக்குகளை சேகரித்தார்.




மதுரை புதூரில் அமைந்துள்ள வடக்கு தொகுதி கழக தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் எம்.உதயகுமார், எம்.எல்.ராஜ் , ப.கோபிநாதன், ஐ.முபாரக் மந்திரி, விஎன்.முருகன், எம்.பாலாஜி ஆகியோர் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர். மேலும் 14வது வார்டு முன்னாள் அதிமுக வட்ட செயலாளர் விஜயகுமார் என்ற மச்சக்காளை , தற்போதைய அதிமுக 10வது வார்டு வட்டச் செயலாளர் கே.எம். கண்ணன் உள்ளிட்ட ஏராளமானோரும் திமுகவில் இணைந்தனர். இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் ஏ.கே.ஆறுமுகம், பெ.சசிகுமார், அறிவுநிதி, சரவணன், உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



மதுரை மத்திய தொகுதி கழக வேட்பாளர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் தொகுதிக்குட்பட்ட எல்லிஸ் நகர் பகுதியில் வீதி வீதியாக சென்று சாதனை திட்டங்களை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். உடன் பகுதிச் செயலாளர் பி.கே.செந்தில், பொறுப்பாளர் ஒச்சுபாலு, கழக நிர்வாகிகள் பூங்கா மணிகண்டன், பி.கே.சுரேஷ், வைகை பரமன், குடைவீடு அருண்குமார், எஸ்.எஸ்.மாறன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி நிகழ்ச்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்டம், ஆரப்பாளையம், ஞானஒளிவப்புரத்தில் அமைந்திருக்கும் புனித வளனார் தேவாலயத்தில் மதுரை மத்திய தொகுதி கழக வெற்றி வேட்பாளர் P. T. R பழனிவேல் தியாகராஜன் அவர்களை அதரித்து பொதுமக்களிடம் 58 வது வட்ட கழக செயலாளர் சீனி ரமேஷ் தலைமையில் கழக பொதுக்குழு உறுப்பினர் வைகை M பரமன் , பகுதி கழக செயலாளர் S. S.மாறன் முன்னிலையில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிகுமாரு கேட்டு கொண்ட போது எடுத்த படம். உடன் மாவட்ட பிரதிநிதிகள் உருட்டி ரமேஷ் , பாண்டி, அழகர், கோபால், கருப்பு, ரவி சங்கர், பீட்டர், வேல்முருகன்,ஷாகுல், பாலு, மாரிச்சாமி, தீபக், வழக்கறிஞர் அணி தோழர்கள் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.



பெருமாள் கோவில்பட்டியைச் சேர்ந்த பாஜக, தவெக கட்சியைச் சேர்ந்த 25 குடும்பத்தினர் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். ரெட்டியார்சத் திரம் ஒன்றியம், கரிசல்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த முக்கிய நிர்வாகி சந்திரசேகர் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து தி.மு.க.வில் இணைந்தனர். அருகில் மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, கரிசல்பட்டி ஜோசப் ஆசான் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழித் தொகுதி, காரியாபட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகளில் வாக்குச் சேகரித்தார் மதசார்பற்ற திமுக கூட்டணி வேட்பாளர் தங்கம் தென்னரசு.



மதுரை கிழக்கு தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொகுதிக்குட்பட்ட திருப்பாலை பகுதியில் வீதி வீதியாக சென்று பொது மக்களை சந்தித்து கழக அரசின் சாதனை திட்டங்களை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார், உடன் பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், கௌரிசங்கர், மருது பாண்டியன், முன்னாள் மண்டல தலைவர் வாசுகி சசிகுமார், முன்னாள் ஒன்றிய சேர்மன் வீரராகவன், சிறுபான்மை உரிமை நலப்பிரிவு மாவட்ட அமைப்பாளர் மீரா ஜான், வட்டச் செயலாளர்கள் திருப்பாலை ராமமூர்த்தி, லட்சுமணன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சியினர், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்




மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்றத் தொகுதி, குத்தாலம் மேற்கு ஒன்றியம் ஏ.கிளியனூரில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் நிவேதா எம்.முருகன் வாக்கு சேகரித்தார்.உடன் குத்தாலம் மேற்கு ஒன்றியக் கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா மற்றும் கூட்டணிக் கட்சியினர் பங்கேற்றனர்.